

# அருட்பெருஞ்சோதி அகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா
திருச்சிற்றம்பலம்

1 அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி 2
2 அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ் அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி 4
3 ஆகம முடிமேல் ஆரண முடிமேல் ஆகநின்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி 6
4 இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய் அகமறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி 8
5 ஈனமின்றி இகபரத்து இரண்டின்மேற் பொருளாய் ஆனலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி 10
6 உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல் அரைசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி 12
7 ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும் ஆக்கமும் அருளிய அருட்பெருஞ் ஜோதி 14
8 எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்திஎன் அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 16
9 ஏறா நிலைமிசை ஏற்றிஎன் தனக்கே ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி 18
10 ஐயமும் திரிபும் அறுத்தெனது உடம்பினுள் ஐயமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 20
11 ஒன்றென இரண்டென ஒன்று இரண்டென இவை அன்றென விளங்கிய அருட்பெருஞ் ஜோதி 22
12 ஓதா துணர்ந்திட ஒளிஅளித்து எனக்கே ஆதாரம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 24
13 ஔவியம் ஆதிஓர் ஆறுந் தவிர்த்தபேர் அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி 26
14 திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும்ஓர் அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி 28
15 சுத்தசன் மார்க்கச் சுகத்தனி வெளிஎனும் அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 30
16 சுத்தமெய்ஞ் ஞானச் சுகோதய வெளிஎனும் அத்து விதச்சபை அருட்பெருஞ் ஜோதி 32
17 தூய கலாந்தச் சுகந்தரு வெளிஎனும் ஆயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி 34
18 ஞானயோ காந்த நடத்திரு வெளிஎனும் ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 36
19 விமல போதாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும் அமலசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி 38
20 பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும் அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி 40
21 சுத்தவே தாந்தத் துரியமேல் வெளிஎனும் அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 42
22 சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளிஎனும் அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 44
23 தகரமெய்ஞ் ஞானத் தனிப்பெரு வெளிஎனும் அகர நிலைப்பதி அருட்பெருஞ் ஜோதி 46
24 தத்துவா தீதத் தனிப்பொருள் வெளிஎனும் அத்திரு அம்பலத் தருட்பெருஞ் ஜோதி 48
25 சச்சிதா னந்தத் தனிப்பர வெளிஎனும் அச்சியல் அம்பலத் தருட்பெருஞ் ஜோதி 50
26 சாகாக் கலைநிலை தழைத்திடு வெளிஎனும் ஆகா யத்தொளிர் அருட்பெருஞ் ஜோதி 52
27 காரண காரியம் காட்டிடு வெளிஎனும் ஆரணச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 54
28 ஏகம் அனேகம் எனப்பகர் வெளிஎனும் ஆகமச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 56
29 வேதாக மங்களின் விளைவுகட் கெல்லாம் ஆதார மாம்சபை அருட்பெருஞ் ஜோதி 58
30 என்றா தியசுடர்க்கு இயனிலை ஆய்அது அன்றாம் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி 60
31 சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய் அமையுந் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி 62
32 முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள் அச்சுட ராம்சபை அருட்பெருஞ் ஜோதி 64
33 துரியமும் கடந்த சுக பூரணந்தரும் அரிய சிற்றம்பலத் தருட்பெருஞ் ஜோதி 66
34 எவ்வகைச் சுகங்களும் இனிதுற அளித்தருள் அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 68
35 இயற்கைஉண் மையதாய் இயற்கைஇன் பமுமாம் அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 70
36 சாக்கிரா தீதத் தனிவெளி யாய்நிறை வாக்கிய சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 72
37 சுட்டுதற் கரிதாம் சுகாதீத வெளிஎனும் அட்டமேல் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 74
38 நவந்தவிர் நிலைகளும் நண்ணும்ஓர் நிலையாய் அவந்தவிர் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 76
39 உபயபக் கங்களும் ஒன்றெனக் காட்டிய அபயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி 78
40 சேகரமாம் பல சித்தி நிலைக்கெலாம் ஆகரமாம் சபை அருட்பெருஞ் ஜோதி 80
41 மனாதிகட் கரிய மதாதீத வெளியாம் அனாதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி 82
42 ஓதிநின்று உணர்ந்துணர்ந்து உணர்தற்கு அரிதாம் ஆதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி 84
43 வாரமும் அழியா வரமும் தரும் திரு ஆரமுதாம் சபை அருட்பெருஞ் ஜோதி 86
44 இழியாப் பெருநலம் எல்லாம் அளித்தருள் அழியாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 88
45 கற்பம் பலபல கழியினும் அழிவுறா அற்புதம் தரும்சபை அருட்பெருஞ் ஜோதி 90

46 எனைத்தும் துன்பிலா இயல்அளித்து எண்ணிய அனைத்தும் தரும்சபை அருட்பெருஞ் ஜோதி 92
47 பாணிப் பிலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி ஆணிப் பொன்னம்பலத் தருட்பெருஞ் ஜோதி 94
48 எம்பலம் எனத்தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி அம்பலத் தாடல்செய் அருட்பெருஞ் ஜோதி 96
49 தம்பர ஞான சிதம்பரம் எனும்ஓர் அம்பரத் தோங்கிய அருட்பெருஞ் ஜோதி 98
50 எச்சபை பொதுஎன இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் ஜோதி 100
51 வாடுதல் நீக்கிய மணிமன் றிடையே ஆடுதல் வல்ல அருட்பெருஞ் ஜோதி 102
52 நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர் ஆடகப் பொதுஒளிர் அருட்பெருஞ் ஜோதி 104
53 கற்பனை முழுவதும் கடந்தொளி தரும்ஓர் அற்புதச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 106
54 ஈன்றநற் றாயினும் இனிய பெருந்தயவு ஆன்றசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி 108
55 இன்புறு நான்உளத்து எண்ணியாங்கு எண்ணியாங்கு அன்புறத் தருசபை அருட்பெருஞ் ஜோதி 110
56 எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது அம்மை அப்பனுமாம் அருட்பெருஞ் ஜோதி 112
57 பிரிவுற்று அறியாப் பெரும் பொருளாய் என் அறிவுக் கறிவாம் அருட்பெருஞ் ஜோதி 114
58 சாதியும் மதமும் சமயமும் காணா ஆதி அனாதியாம் அருட்பெருஞ் ஜோதி 116
59 தனுகர ணாதிகள் தாம் கடந்து அறியும்ஓர் அனுபவம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 118
60 உனும்உணர் உணர்வாய் உணர்வெலாம் கடந்த அனுபவா தீத அருட்பெருஞ் ஜோதி 120
61 பொது உணர் உணரும் போதலால் பிரித்தே அதுஎனில் தோன்றா அருட்பெருஞ் ஜோதி 122
62 உளவினில் அறிந்தால் ஒழியமற் றளக்கின் அளவினில் அளவா அருட்பெருஞ் ஜோதி 124
63 என்னையும் பணிகொண்டு இறவா வரமளித்து அன்னையில் உவந்த அருட்பெருஞ் ஜோதி 126
64 ஓதி ஓதாமல் உறவெனக் களித்த ஆதி ஈறில்லா அருட்பெருஞ் ஜோதி 128
65 படிஅடி வான்முடி பற்றினும் தோற்றா அடிமுடி எனும்ஓர் அருட்பெருஞ் ஜோதி 130
66 பவனத்தின் அண்டப் பரப்பின் எங்கெங்கும் அவனுக் கவனாம் அருட்பெருஞ் ஜோதி 132
67 திவள்உற்ற அண்டத் திரளின் எங்கெங்கும் அவளுக் கவளாம் அருட்பெருஞ் ஜோதி 134
68 மதன்உற்ற அண்ட வரைப்பின் எங்கெங்கும் அதனுக் கதுவாம் அருட்பெருஞ் ஜோதி 136
69 எப்பாலு மாய்வெளி எல்லாம் கடந்துமேல் அப்பாலும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 138
70 வல்லதாய் எல்லாம் ஆகிஎல் லாமும் அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 140
71 எப்பொருள் மெய்ப்பொருள் என்பர்மெய் கண்டோர் அப்பொருள் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 142
72 தாங்ககி லாண்ட சராசர நிலைநின்று ஆங்குற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 144
73 சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம்புறத்து அத்திசை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 146
74 சத்திகள் எல்லாம் தழைக்கஎங் கெங்கும் அத்தகை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 148
75 முந்துறும் ஐந்தொழில் மூர்த்திகள் பலர்க்கும் ஐந்தொழில் அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி 150
76 பெரிதினும் பெரிதாய்ச் சிறிதினும் சிறிதாய் அரிதினும் அரிதாம் அருட்பெருஞ் ஜோதி 152
77 காட்சியும் காணாக் காட்சியும் அதுதரும் ஆட்சியும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 154
78 இன்புறு சித்திகள் எல்லாம் புரிகஎன்று அன்புடன் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 156
79 இறவா வரமளித் தென்னைமேல் ஏற்றிய அறவாழி யாம்தனி அருட்பெருஞ் ஜோதி 158
80 நான்அந்தம் இல்லா நலம்பெற எனக்கே ஆனந்தம் நல்கிய அருட்பெருஞ் ஜோதி 160
81 எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக என்றெனை அண்ணிஉள் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி 162
82 மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீ அது வாயினை என்று அருள் அருட்பெருஞ் ஜோதி 164
83 எண்ணிற் செழுந்தேன் இனியதெள் அமுதென அண்ணித்து இனிக்கும் அருட்பெருஞ் ஜோதி 166
84 சிந்தையில் துன்பொழி சிவம் பெறுக எனத் தொழில் ஐந்தையும் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 168
85 எங்கெங்கு இருந்துயிர் ஏதெது வேண்டினும் அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ் ஜோதி 170
86 சகமுதல் புறப்புறம் தங்கிய அகப்புறம் அகம்புறம் முற்றுமாய் அருட்பெருஞ் ஜோதி 172
87 சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும் அகரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 174
88 உபரச வேதியின் உபயமும் பரமும் அபரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி 176
89 மந்தணம் இதுஎன மறுவிலா மதியால் அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி 178
90 எம்புயக் கனிஎன எண்ணுவார் இதய அம்புயத் தமர்ந்த அருட்பெருஞ் ஜோதி 180
91 செடி அறுத்தே திட தேகமும் போகமும் அடியருக்கே தரும் அருட்பெருஞ் ஜோதி 182
92 துன்பறுத் தொருசிவ துரிய சுகந்தனை அன்பருக்கே தரும் அருட்பெருஞ் ஜோதி 184
93 பொதுஅது சிறப்பது புதியது பழயதென்று அதுஅது வாய்த்திகழ் அருட்பெருஞ் ஜோதி 186
94 சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒருபரை ஆதனத் தோங்கிய அருட்பெருஞ் ஜோதி 188
95 ஓமயத் திருவுரு உவப்புடன் அளித்தெனக்கு ஆமயத் தடைதவிர் அருட்பெருஞ் ஜோதி 190

96 எப்படி எண்ணியது என்கருத்து இங்கெனக்கு அப்படி அருளிய அருட்பெருஞ் ஜோதி 192
97 எத்தகை விழைந்தன என்மனம் இங்கெனக்கு அத்தகை அருளிய அருட்பெருஞ் ஜோதி 194
98 இங்குறத் திரிந்துளம் இளையா வகைஎனக்கு அங்கையில் கனியாம் அருட்பெருஞ் ஜோதி 196
99 பார் உயப் புரிகெனப் பணித்து எனக்கு அருளி என் ஆருயிர்க்கு உள்ஒளிர் அருட்பெருஞ் ஜோதி 198
100 தேவியுற்று ஒளிர்தரு திரு உருவுடன் எனது ஆவியில் கலந்தொளிர் அருட்பெருஞ் ஜோதி 200
101 எவ்வழி மெய்வழி என்பவே தாகமம் அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 202
102 வையமும் வானமும் வாழ்த்திட எனக்கருள் ஐயறி வளித்த அருட்பெருஞ் ஜோதி 204
103 சாமாறு அனைத்தும் தவிர்த்திங்கு எனக்கே ஆமாறு அருளிய அருட்பெருஞ் ஜோதி 206
104 சத்திய மாம்சிவ சத்தியை ஈந்தெனக்கு அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ் ஜோதி 208
105 சாவா நிலைஇது தந்தனம் உனக்கே ஆவா எனஅருள் அருட்பெருஞ் ஜோதி 210
106 சாதியும் மதமும் சமயமும் பொய்என ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி 212
107 மயர்ந்திடேல் சிறிதும் மனந்தளர்ந் தஞ்சேல் அயர்ந்திடேல் என்றருள் அருட்பெருஞ் ஜோதி 214
108 தேசுறத் திகழ்தரு திருநெறிப் பொருளியல் ஆசறத் தெரித்த அருட்பெருஞ் ஜோதி 216
109 காட்டிய உலகெலாம் கருணையால் சித்தியின் ஆட்டியல் புரியும் அருட்பெருஞ் ஜோதி 218
110 எங்குலம் எம்மினம் என்பதொண் ணூற்றாறு அங்குலம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி 220
111 எம்மதம் எம்இறை என்ப உயிர்த்திரள் அம்மதம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி 222
112 கூறிய கருநிலை குலவிய கீழ்மேல் ஆறியல் எனஉரை அருட்பெருஞ் ஜோதி 224
113 எண்தர முடியா திலங்கிய பற்பல அண்டமும் நிறைந்தொளிர் அருட்பெருஞ் ஜோதி 226
114 சாருயிர்க் கெல்லாம் தாரக மாம்பரை ஆருயிர்க் குயிராம் அருட்பெருஞ் ஜோதி 228
115 வாழி நீடூழி வாழி என்றோங்கு பேர் ஆழியை அளித்த அருட்பெருஞ் ஜோதி 230
116 மாய்ந்தவர் மீட்டும் வருவெறி தந்திதை ஆய்ந்திடென்று உரைத்த அருட்பெருஞ் ஜோதி 232
117 எச்சம் நினக்கிலை எல்லாம் பெறுகஎன்று அச்சம் தவிர்த்தஎன் அருட்பெருஞ் ஜோதி 234
118 நீடுக நீயே நீள்உல கனைத்தும்நின்று ஆடுக என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 236
119 முத்திறல் வடிவமும் முன்னியாங் கெய்துறும் அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 238
120 மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும் ஆவகை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 240
121 கருமசித் திகளின் கலைபல கோடியும் அரசுற எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 242
122 யோக சித்திகள் வகை உறுபல கோடியும் ஆகஎன் றெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 244
123 ஞான சித்தியின் வகை நல்விரிவு அனைத்தும் ஆனியின்று எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 246
124 புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை அடைவதென் றருளிய அருட்பெருஞ் ஜோதி 248
125 முத்திஎன் பதுநிலை முன்னுறு சாதனம் அத்தக வென்றஎன் அருட்பெருஞ் ஜோதி 250
126 சித்திஎன் பதுநிலை சேர்ந்த அனுபவம் அத்திறல் என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 252
127 ஏகசிற் சித்தியே இயல்உற அனேகம் ஆகிய தென்றஎன் அருட்பெருஞ் ஜோதி 254
128 இன்ப சித்தியின் இயல் ஏகம் அனேகம் அன்பருக் கென்ற என் அருட்பெருஞ் ஜோதி 256
129 எட்டிரண் டென்பன இயலும் முற்படி என அட்ட நின் றருளிய அருட்பெருஞ் ஜோதி 258
130 இப்படி கண்டனை இனிஉறு படிஎலாம் அப்படி யேஎனும் அருட்பெருஞ் ஜோதி 260
131 படிமுடி கடந்தனை பார்இது பார்என அடிமுடி காட்டிய அருட்பெருஞ் ஜோதி 262
132 ஜோதியுட் ஜோதியின் சொரூபமே அந்தம் ஆதிஎன் றருளிய அருட்பெருஞ் ஜோதி 264
133 இந்தசிற் ஜோதியின் இயல்உரு ஆதி அந்தம்என் றருளிய அருட்பெருஞ் ஜோதி 266
134 ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே ஆதிஎன் றருளிய அருட்பெருஞ் ஜோதி 268
135 நல்அமு தென்ஒரு நாஉளம் காட்டிஎன் அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 270
136 கற்பகம் என்உளங் கைதனில் கொடுத்தே அற்புதம் இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி 272
137 கதிர்நலம் என்இரு கண்களிற் கொடுத்தே அதிசயம் இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி 274
138 அருள்ஒளி என்தனி அறிவினில் விரித்தே அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ் ஜோதி 276
139 பரைஒளி என்மனப் பதியினில் விரித்தே அரசது இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி 278
140 வல்லப சத்திகள் வகைஎலாம் அளித்தெனது அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 280
141 ஆரியல் அகம்புறம் அகப்புறம் புறப்புறம் ஆரமு தெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 282
142 சூரிய சந்திர ஜோதியுட் ஜோதிஎன்று ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ் ஜோதி 284
143 பிறிவேது இனி உனைப் பிடித்தனம் உனக்கு நம் அறிவே வடிவெனும் அருட்பெருஞ் ஜோதி 286
144 எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும் அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ் ஜோதி 288
145 மாண்டுழ லாவகை வந்திளங் காலையே ஆண்டுகொண் டருளிய அருட்பெருஞ் ஜோதி 290

146 பற்றுகள் அனைத்தையும் பற்றறத் தவிர்த்தெனது அற்றமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 292
147 சமயம் குலமுதல் சார்பெலாம் விடுத்த அமயந் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி 294
148 வாய்தற் குரித்தெனும் மறைஆ கமங்களால் ஆய்தற் கரிய அருட்பெருஞ் ஜோதி 296
149 எல்லாம் வல்லசித் தெனக்களித் தெனக்குனை அல்லா திலைஎனும் அருட்பெருஞ் ஜோதி 298
150 நவைஇலா உளத்தில் நாடிய நாடிய அவைஎலாம் அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி 300
151 கூற்றுதைத் தென்பால் குற்றமும் குணங்கொண்டு ஆற்றல்மிக் களித்த அருட்பெருஞ் ஜோதி 302
152 நன்றறி வறியா நாயினேன் தனையும் அன்றுவந் தாண்ட அருட்பெருஞ் ஜோதி 304
153 நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன் ஆயினும் அருளிய அருட்பெருஞ் ஜோதி 306
154 தோத்திரம் புகலேன் பாத்திரம் அல்லேன் ஆத்திரம் அளித்த அருட்பெருஞ் ஜோதி 308
155 எச்சோ தனைகளும் இயற்றா தெனக்கே அச்சோ என்றருள் அருட்பெருஞ் ஜோதி 310
156 ஏறா நிலைநடு ஏற்றிஎன் றனைஈண்டு ஆறாறு கடத்திய அருட்பெருஞ் ஜோதி 312
157 தாபத் துயரம் தவிர்த்துல குறும்எலா ஆபத்தும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 314
158 மருட்பகை தவிர்த்தெனை வாழ்வித் தெனக்கே அருட்குரு வாகிய அருட்பெருஞ் ஜோதி 316
159 உருவமும் அருவமும் உபயமும் ஆகிய அருள்நிலை தெரித்த அருட்பெருஞ் ஜோதி 318
160 இருள் அறுத்து என்உளத் தெண்ணியாங் கருளி அருளமு தளித்த அருட்பெருஞ் ஜோதி 320
161 தெருள்நிலை இதுவெனத் தெருட்டிஎன் உளத்திருந்து அருள்நிலை காட்டிய அருட்பெருஞ் ஜோதி 322
162 பொருட்பதம் எல்லாம் புரிந்துமேல் ஓங்கிய அருட்பதம் அளித்த அருட்பெருஞ் ஜோதி 324
163 உருள்சக டாகிய உளஞ்சலி யாவகை அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ் ஜோதி 326
164 வெருள்மன மாயை வினைஇருள் நீக்கிஉள் அருள்விளக் கேற்றிய அருட்பெருஞ் ஜோதி 328
165 சுருள்விரி வுடைமனச் சுழல்எலாம் அறுத்தே அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ் ஜோதி 330
166 விருப்போ டிகல்உறு வெறுப்பும் தவிர்த்தே அருட்பே றளித்த அருட்பெருஞ் ஜோதி 332
167 அருட்பேர் தரித்து உலகனைத்தும் மலர்ந்திட அருட்சீர் அளித்த அருட்பெருஞ் ஜோதி 334
168 உலகெலாம் பரவஎன் னுள்ளத் திருந்தே அலகிலா ஒளிசெய் அருட்பெருஞ் ஜோதி 336
169 விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய் அண்ணி நிறைந்த அருட்பெருஞ் ஜோதி 338
170 விண்ணுறு விண்ணாய் விண்ணிலை விண்ணாய் அண்ணி வயங்கும் அருட்பெருஞ் ஜோதி 340
171 காற்றினுட் காற்றாய்க் காற்றிடைக் காற்றாய் ஆற்றலின் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி 342
172 காற்றுறு காற்றாய்க் கானிலைக் காற்றாய் ஆற்ற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 344
173 அனலினுள் அனலாய் அனல்நடு அனலாய் அனலுற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 346
174 அனலுறும் அனலாய் அனல்நிலை அனலாய் அனலுற வயங்கும் அருட்பெருஞ் ஜோதி 348
175 புனலினுள் புனலாய்ப் புனலிடைப் புனலாய் அனைஎன வயங்கும் அருட்பெருஞ் ஜோதி 350
176 புனலுறு புனலாய்ப் புனல்நிலைப் புனலாய் அனைஎனப் பெருகும் அருட்பெருஞ் ஜோதி 352
177 புவியினுட் புவியாய்ப் புவிநடுப் புவியாய் அவைதர வயங்கும் அருட்பெருஞ் ஜோதி 354
178 புவியுறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய் அவைகொள விரிந்த அருட்பெருஞ் ஜோதி 356
179 விண்ணிலை சிவத்தின் வியனிலை அளவி அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 358
180 வளிநிலைச் சத்தியின் வளர்நிலை அளவி அளிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 360
181 நெருப்பது நிலைநடு நிலைஎலாம் அளவி அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி 362
182 நீர்நிலை திரைவளர் நிலைதனை அளவி ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 364
183 புவிநிலைச் சுத்தமாம் பொற்பதி அளவி அவையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 366
184 மண்ணினில் திண்மையை வகுத்து அதில் கிடக்கை அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 368
185 மண்ணினில் பொன்மை வகுத்ததில் ஐம்மையை அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 370
186 மண்ணினில் ஐம்பூ வகுத்ததில் ஐந்திறம் அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 372
187 மண்ணினில் நாற்றம் வகுத்தது பல்வகை அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 374
188 மண்ணினில் பற்பல வகை கரு நிலஇயல் அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 376
189 மண்ணினில் ஐந்தியல் வகுத்ததில் பல்பயன் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 378
190 மண்ணிடை அடிநிலை வகுத்ததில் பல்நிலை அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 380
191 மண்ணில் ஐந்து ஐந்து வகையும் கலந்துகொண்டு அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 382
192 மண்ணியல் சத்திகள் மண்செயல் சத்திகள் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 384
193 மண்ணுருச் சத்திகள் மண்கலைச் சத்திகள் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 386
194 மண்ணொளிச் சத்திகள் மண்கருச் சத்திகள் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 388
195 மண்கணச் சத்திகள் வகைபல பலவும் அண்கொள அமைத்த அருட்பெருஞ் ஜோதி 390

196 மண்ணிலைச் சத்தர்கள் வகைபல பலவும் அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 392
197 மண்கரு உயிர்த்தொகை வகைவிரி பலவா அண்கொள அமைத்த அருட்பெருஞ் ஜோதி 394
198 மண்ணினில் பொருள்பல வகைவிரி வெவ்வேறு அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 396
199 மண்ணுறு நிலைபல வகுத்ததில் செயல்பல அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 398
200 மண்ணிடைப் பக்குவம் வகுத்ததில் பயன்பல அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 400
201 மண்ணியல் பலபல வகுத்ததில் பிறவும் அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 402
202 நீரினில் தண்மையும் நிகழ்ஊ றொழுக்கமும் ஆருற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 404
203 நீரினில் பசுமையை நிறுத்தி அதில் பல ஆருற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 406
204 நீரிடைப் பூவியல் நிகழ்உறு திறஇயல் ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 408
205 நீரினில் சுவைநிலை நிறைத்து அதில் பல்வகை ஆருறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 410
206 நீரினில் கருநிலை நிகழ்த்திய பற்பல ஆருற வகுத்த வருட்பெருஞ் ஜோதி 412
207 நீரிடை நான்கியல் நிலவுவித்து அதிற்பல ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 414
208 நீரிடை அடிநடு நிலைஉற வகுத்த னல் ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 416
209 நீரிடை ஒளிஇயல் நிகழ்பல குணஇயல் ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 418
210 நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 420
211 நீரினில் சத்தர்கள் நிறைவகை உறைவகை ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 422
212 நீரிடை உயிர்பல நிகழ்உறு பொருள்பல ஆருற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 424
213 நீரிடை நிலைபல நிலைஉறு செயல்பல ஆர்கொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி 426
214 நீர்உறு பக்குவ நிறைவுறு பயன்பல ஆருற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 428
215 நீர்இயல் பலபல நிறைத்து அதில் பிறவும் ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 430
216 தீயினில் சூட்டியல் சேர்தரச் செலவியல் ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 432
217 தீயினில் வெண்மைத் திகழ்இயல் பலவாய் ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 434
218 தீயிடைப் பூஎலாம் திகழுறு திறம்எலாம் ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 436
219 தீயிடை ஒளியே திகழுற அமைத்ததில் ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 438
220 தீயிடை அருநிலை திருநிலை கருநிலை ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 440
221 தீயிடை மூவியல் செறிவித்து அதிற்பல ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 442
222 தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 444
223 தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பலபல ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 446
224 தீயிடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும் ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 448
225 தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள் ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 450
226 தீயிடை உயிர்பல திகழுறு பொருள்பல ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 452
227 தீயிடை நிலைபல திகழ்செயல் பலபயன் ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 454
228 தீயினில் பக்குவம் சேர்குணம் இயற்குணம் ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 456
229 தீயிடை உருக்கியல் சிறப்பியல் பொதுவியல் ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 458
230 தீஇயல் பலபல செறித்ததில் பலவும் ஆயுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 460
231 காற்றிடை அசைஇயல் கலைஇயல் உயிரியல் ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 462
232 காற்றிடைப் பூவியல் கருதுறு திறஇயல் ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 464
233 காற்றினில் ஊறியல் காட்டுறு பலபல ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 466
234 காற்றினில் பெருநிலை கருநிலை அளவில ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 468
235 காற்றிடை ஈரியல் காட்டி அதிற்பல ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 470
236 காற்றினில் இடைநடு கடைநடு அகம்புறம் ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 472
237 காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 474
238 காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 476
239 காற்றிடைச் சத்தர்கள் கணிதம் கடந்தன ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 478
240 காற்றிடை உயிர்பல கதிபல கலைபல ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 480
241 காற்றிடை நானிலைக் கருவிகள் அனைத்தையும் ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 482
242 காற்றிடை உணரியல் கருதியல் ஆகிய ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 484
243 காற்றிடைச் செயல்எலாம் கருதிய பயன்எலாம் ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 486
244 காற்றினில் பக்குவம் கதிஎலாம் விளைவித்து ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 488
245 காற்றினில் காலம் கருதுறு வகைஎலாம் ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 490

246 காற்றியல் பலபல கணித்ததிற் பிறவும் ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 492
247 வெளியிடைப் பகுதியின் விரிவியல் அணைவியல் அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 494
248 வெளியிடைப் பூஎலாம் வியப்புறு திறன்எலாம் அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 496
249 வெளியினில் ஒலிநிறை வியநிலை அனைத்தும் அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 498
250 வெளியிடைக் கருநிலை விரிநிலை அருநிலை அளிகொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி 500
251 வெளியிடை முடிநிலை விளங்குற வகுத்தே அளிபெற விளக்கும் அருட்பெருஞ் ஜோதி 502
252 வெளியினில் சத்திகள் வியப்புற சத்தர்கள் அளியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 504
253 வெளியிடை ஒன்றே விரித்ததில் பற்பல அளிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 506
254 வெளியிடைப் பலவே விரித்ததில் பற்பல அளிதர அமைத்த அருட்பெருஞ் ஜோதி 508
255 வெளியிடை உயிரியல் வித்தியல் சித்தியல் அளிபெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 510
256 வெளியின் அனைத்தையும் விரித்ததில் பிறவும் அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 512
257 புறநடு வொடுகடை புணர்ப்பித்து ஒருமுதல் அறமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 514
258 புறந்தலை நடுவொடு புணர்ப்பித் தொருகடை அறம்பெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 516
259 அகப்புற நடுக்கடை அணைவால் புறமுதல் அகப்பட வகுத்த அருட்பெருஞ் ஜோதி 518
260 அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை அகப்பட அமைத்த அருட்பெருஞ் ஜோதி 520
261 கருதக நடுவொடு கடைஅணைந்து அகமுதல் அருளுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 522
262 தணிஅக நடுவொடு தலைஅணைந்து அகக்கடை அணியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 524
263 அகநடு புறக்கடை அணைந்து அகப் புறமுதல் அகமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 526
264 அகநடு புறத்தலை அணைந்து அகப் புறக்கடை அகலிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 528
265 அகநடு அதனால் அகப்புற நடுவை அகமற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 530
266 அகப்புற நடுவால் அணிபுற நடுவை அகப்பட அமைத்த அருட்பெருஞ் ஜோதி 532
267 புறநடு அதனால் புறப்புற நடுவை அறமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 534
268 புகலரும் அகண்ட பூரண நடுவால் அகநடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி 536
269 புறப்புறக் கடைமுதல் புணர்ப்பால் புறப்புறம் அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 538
270 புறத்தியல் கடைமுதல் புணர்ப்பால் புறத்துறும் அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 540
271 அகப்புறக் கடைமுதல் அணைவால் அகக்கணம் அகத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 542
272 அகக்கடை முதல் புணர்ப் பதனால் அகக்கணம் அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 544
273 வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும் ஆனற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 546
274 நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும் அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி 548
275 நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மேல் உயிர்ப்பும் ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 550
276 புனல்மேல் புவியும் புவிமேல் புடைப்பும் அனல்மேல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 552
277 பகுதிவான் வெளியில் படர்ந்தமா பூத அகல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி 554
278 உயிர்வெளி இடையே உரைக்கரும் பகுதி அயவெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி 556
279 உயிர்வெளி அதனை உணர்கலை வெளியில் அயலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 558
280 கலைவெளி அதனைக் கலப்பறு சுத்த அலர்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி 560
281 சுத்த நல் வெளியைத் துரிசறு பரவெளி அத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 562
282 பரவெளி அதனைப் பரம்பர வெளியில் அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 564
283 பரம்பர வெளியைப் பராபர வெளியில் அரந்தெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 566
284 பராபர வெளியைப் பகர்பெரு வெளியில் அராவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 568
285 பெருவெளி அதனைப் பெருஞ்சுக வெளியில் அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 570
286 குணமுதல் கருவிகள் கூடிய பகுதியில் அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 572
287 மனமுதல் கருவிகள் மன்னுயிர் வெளியிடை அனமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 574
288 காலமே முதலிய கருவிகள் கலைவெளி ஆலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 576
289 துரிசறு கருவிகள் சுத்தநல் வெளியிடை அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 578
290 இவ்வெளி எல்லாம் இலங்கஅண் டங்கள் அவ்வயின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 580
291 ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர் ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 582
292 சிருட்டித் தலைவரைச் சிருட்டி அண்டங்களை அருட் திறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 584
293 காவல் செய் தலைவரைக் காவல் அண்டங்களை ஆவகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 586
294 அழித்தல்செய் தலைவரை அவரண் டங்களை அழுக்கற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 588
295 மறைத்திடு தலைவரை மற்றும்அண் டங்களை அறத்தொடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி 590

296 தெளிவுசெய் தலைவரைத் திகழும்அண் டங்களை அளிபெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 592
297 விந்துவாம் சத்தியை விந்தின்அண் டங்களை அந்திறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 594
298 ஓங்கார சத்திகள் உற்றஅண் டங்களை ஆங்காக அமைத்த அருட்பெருஞ் ஜோதி 596
299 சத்தத் தலைவரைச் சாற்றும்அண் டங்களை அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 598
300 நாதமாம் பிரமமும் நாதஅண் டங்களும் ஆதரம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 600
301 பகர்பரா சத்தியைப் பதியும்அண் டங்களை அகமற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 602
302 பரசிவ பதியைப் பரசிவா அண் டங்களை அரசுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 604
303 எண்ணில்பல் சத்தியை எண்ணில்அண் டங்களை அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 606
304 அளவில்பல் சத்தரை அளவில்அண் டங்களை அளவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 608
305 உயிர்வகை அண்டம் உலப்பில எண்ணில அயர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 610
306 களவில கடல்வகை கங்கில கரைஇல அளவில வகுத்த அருட்பெருஞ் ஜோதி 612
307 கடலவை அனைத்துங் கரைஇன்றி நிலையுற அடல்அனல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 614
308 கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும் அடலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 616
309 கடலிடைப் பல்வளங் கணித்ததிற் பல்உயிர் அடலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 618
310 மலையிடைப் பல்வளம் வகுத்ததிற் பல்உயிர் அலைவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 620
311 ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம் அன்றற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 622
312 பத்திடை ஆயிரம் பகல் அதில் கோடி அத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 624
313 நூற்றிடை இலக்கம் நுவலதில் அனந்தம் ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 626
314 கோடியில் அனந்த கோடிபல் கோடி ஆடுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 628
315 வித்தியல் ஒன்றா விளைவியல் பலவா அத்தகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 630
316 விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க அளவுசெய் தமைத்த அருட்பெருஞ் ஜோதி 632
317 வித்தும் பதமும் விளைஉப கரிப்பும் அத்திறல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 634
318 வித்திடை முளையும் முளையிடை விளைவும் அத்தக அமைத்த அருட்பெருஞ் ஜோதி 636
319 வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும் அத்திறம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 638
320 விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும் அளையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 640
321 முளையதின் முளையும் முளையினுள் முளையும் அளைதர அமைத்த அருட்பெருஞ் ஜோதி 642
322 வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும் அத்துற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 644
323 பதமதிற் பதமும் பதத்தினுள் பதமும் அதிர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 646
324 ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும் அற்றென வகுத்த அருட்பெருஞ் ஜோதி 648
325 பொருள்நிலை உறுப்பியல் பொதுவகை முதலிய அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 650
326 உறவினில் உறவும் உறவினில் பகையும் அறன் உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 652
327 பகையினில் பகையும் பகையினில் உறவும் அகைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 654
328 பாதியும் முழுதும் பதிசெயும் அந்தமும் ஆதியும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 656
329 துணையும் நிமித்தமும் துலங்கதின் அதுவும் அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 658
330 உருவதின் உருவும் உருவினுள் உருவும் அருளுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 660
331 அருவினுள் அருவும் அருவதில் அருவும் அருளியல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 662
332 கரணமும் இடமும் கலைமுதல் அணையுமோர் அரணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 664
333 உருவதில் அருவும் அருவதில் உருவும் அருளுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 666
334 வண்ணமும் வடிவும் மயங்கிய வகைபல அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 668
335 சிறுமையில் சிறுமையும் சிறுமையில் பெருமையும் அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 670
336 பெருமையின் பெருமையும் பெருமையில் சிறுமையும் அருள்நிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 672
337 திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும் அண்மையின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 674
338 மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும் அன்மைஅற் றமைத்த அருட்பெருஞ் ஜோதி 676
339 அடியினுள் அடியும் அடியிடை அடியும் அடியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 678
340 நடுவினுள் நடுவும் நடுவதில் நடுவும் அடர்வுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 680
341 முடியினுள் முடியும் முடியினில் முடியும் அடர்தர அமைத்த அருட்பெருஞ் ஜோதி 682
342 அகப்பூ அகவுறுப் பாக்க அதற்கவை அகத்தே வகுத்த அருட்பெருஞ் ஜோதி 684
343 புறப்பூ புறத்தில் புனையிரு வாக்கிட அறத்துடன் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 686
344 அகப் புறப்பூ அகப்புற உறுப்பு இயற்றிட அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 688
345 புறப்புறப் பூவதில் புறப்புற உறுப்புற அறத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 690

346 பாரிடை வேர்வையில் பையிடை முட்டையில் ஆருயிர் அமைக்கும் அருட்பெருஞ் ஜோதி 692
347 ஊர்வன பறப்பன உறுவன நடப்பன ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 694
348 அசைவில அசைவுள ஆருயிர்த் திரள்பல அசலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 696
349 அறிவொரு வகைமுதல் ஐவகை அறுவகை அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 698
350 வெவ்வேறு இயலொடு வெவ்வேறு பயன்உற அவ்வா றமைத்த அருட்பெருஞ் ஜோதி 700
351 சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 702
352 பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 704
353 பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் இரண்டும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 706
354 பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும் அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 708
355 பெண்ணியல் ஆணும் ஆணியல் பெண்ணும் அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 710
356 பெண்திறல் புறத்தும் ஆண்திறல் அகத்தும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 712
357 பெண்ணியல் மனமும் ஆணியல் அறிவும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 714
358 தனித்தனி வடிவினும் தக்கஆண் பெண்இயல் அனைத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 716
359 உனற்கரும் உயிருள உடலுள உலகுள அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 718
360 ஓவுறா எழுவகை உயிர்முதல் அனைத்தும் ஆவகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 720
361 பைகளில் முட்டையில் பாரினில் வேர்வினில் ஐபெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 722
362 தாய்கருப் பையினுள் தங்கிய உயிர்களை ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 724
363 முட்டைவாய்ப் பயிலும் முழுஉயிர்த் திரள்களை அட்டமே காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 726
364 நிலம்பெறும் உயிர்வகை நீள்குழு அனைத்தும் அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 728
365 வேர்வுற உதித்த மிகும்உயிர்த் திரள்களை ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 730
366 உடலுறு பிணியால் உயிர்உடல் கெடாவகை அடலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 732
367 சிசுமுதல் பருவச் செயல்களின் உயிர்களை அசைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 734
368 உயிருறும் உடலையும் உடலுறும் உயிரையும் அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 736
369 பாடுறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 738
370 முச்சுட ராதியால் எச்சக உயிரையும் அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 740
371 வான்முகில் சத்தியால் மழைபொழி வித்துயிர் ஆனறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 742
372 இன்புறு சத்தியால் எழில்மழை பொழிவித்து அன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 744
373 எண்இயல் சத்தியால் எல்லா உலகினும் அண்உயிர் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 746
374 அண்டப் புறப்புற அமுதம் பொழிந்துயிர் அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 748
375 தேவரை எல்லாம் திகழ்புற அமுதளித்து ஆவகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 750
376 அகப்புற அமுதளித்து ஐவரா திகளை அகப்படக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 752
377 தரும்அக அமுதால் சத்தி சத் தர்களை அருளினில் காக்கும் அருட்பெருஞ் ஜோதி 754
378 காலமும் நியதியும் காட்டிஎவ் வுயிரையும் ஆலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 756
379 விச்சையை இச்சையை விளைவித் துயிர்களை அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 758
380 போகமும் களிப்பும் பொருந்துவித் துயிர்களை ஆகமுட் காக்கும் அருட்பெருஞ் ஜோதி 760
381 கலைஅறிவு அளித்துக் களிப்பினில் உயிரெலாம் அலைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 762
382 விடய நிகழ்ச்சியால் மிகும்உயிர் அனைத்தையும் அடைவுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 764
383 துன்பளித்து ஆங்கே சுகமளித்து உயிர்களை அன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 766
384 கரணேந் தியத்தால் களிப்புற உயிர்களை அரணேர்ந் தளித்தருள் அருட்பெருஞ் ஜோதி 768
385 எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு அத்தகை அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி 770
386 எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு அப்படி அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி 772
387 ஏங்காது உயிர்த்திரள் எங்கெங்கு இருந்தன ஆங்காங்கு அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி 774
388 சொல்லுறும் அசுத்தத் தொல்லுயிர்க்கு அவ்வகை அல்லலில் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 776
389 சுத்தமும் அசுத்தமும் தோய்உயிர்க் கிருமையின் அத்தகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 778
390 வாய்ந்திடும் சுத்த வகைஉயிர்க்கு ஒருமையின் ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 780
391 எவைஎலாம் எவைஎலாம் ஈண்டின ஈண்டின அவைஎலாம் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 782
392 அண்டத் துரிசையும் அகிலத் துரிசையும் அண்டற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 784
393 பிண்டத் துரிசையும் பேருயிர்த் துரிசையும் அண்டற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 786
394 உயிர்உறு மாயையின் உறுவிரி வனைத்தும் அயிர்அற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 788
395 உயிர்உறும் இருவினை உறுவிரி வனைத்தும் அயர்வற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 790

396 காமப் புடைப்பு உயிர்கண் தொடராவகை ஆமற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 792
397 பொங்குறு வெகுளிப் புடைப்புகள் எல்லாம் அங்கற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 794
398 மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு அதம்பெற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 796
399 வடுவுறும் அசுத்த வாதனை அனைத்தையும் அடர்பற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 798
400 சுத்தமும் அசுத்தமும் தோய்ந்தவா தனைகளை அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 800
401 நால்வயிற் துரிசும் நண்ணுயிர் ஆதியில் ஆலற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 802
402 நால்வயிற் படைப்பும் நால்வயிற் காப்பும் ஆலற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 804
403 மூவிடத் திருமையின் முன்னிய தொழிற்கரில் ஆவிடத் தடக்கும் அருட்பெருஞ் ஜோதி 806
404 மூவிட மும்மையின் முன்னிய தொழிற்கரில் ஆவிடம் அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 808
405 தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும் அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 810
406 சுத்தமா நிலையில் சூழுறு விரிவை அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 812
407 கரைவின்மா மாயைக் கரும்பெருந் திரையால் அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 814
408 பேருறு நீலப் பெருந்திரை அதனால் ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 816
409 பச்சைத் திரையால் பரவெளி அதனை அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 818
410 செம்மைத் திரையால் சித்துறு வெளியை அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 820
411 பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 822
412 வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 824
413 கலப்புத் திரையால் கருதனு பவங்களை அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 826
414 விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால் அடர்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 828
415 தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால் அத்திறம் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 830
416 திரைமறைப்பு எல்லாம் தீர்த்து ஆங்காங்கே அரைசுறக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி 832
417 தோற்றமா மாயைத் தொடர்பறுத் தருளின் ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி 834
418 சுத்தமா மாயைத் தொடர்பறுத் தருளை அத்தகை காட்டும் அருட்பெருஞ் ஜோதி 836
419 எனைத்து ஆணவமுதல் எல்லாந் தவிர்த்தே அனுக்கிரகம் புரி அருட்பெருஞ் ஜோதி 838
420 விடய மறைப்பெலாம் விடுவித் துயிர்களை அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 840
421 சொருப மறைப்பெலாம் தொலைப்பித் துயிர்களை அருளினில் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 842
422 மறைப்பின் மறந்தன வருவித்து ஆங்கே அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 844
423 எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 846
424 கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க் கின்பம் அடையுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 848
425 சத்திகள் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம் அத்துறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 850
426 சத்தர்கள் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம் அத்தகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 852
427 படைக்கும் தலைவர்கள் பற்பல கோடியை அடைப்புறப் படைக்கும் அருட்பெருஞ் ஜோதி 854
428 காக்கும் தலைவர்கள் கணக்கில்பல் கோடியை ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ் ஜோதி 856
429 அடக்கும் தலைவர்கள் அளவிலர் தம்மையும் அடர்ப்பற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 858
430 மறைக்கும் தலைவர்கள் வகைபல கோடியை அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி 860
431 தெருட்டும் தலைவர்கள் சேர்பல கோடியை அருட் திறம் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி 862
432 ஐந்தொழில் ஆதிசெய் ஐவர் ஆதிகளை ஐந்தொழி லாதிசெய் அருட்பெருஞ் ஜோதி 864
433 இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில் அறந்தலை அளித்த அருட்பெருஞ் ஜோதி 866
434 செத்தவர் எல்லாம் சிரித்தாங்கு எழுதிறல் அத்தகை காட்டிய அருட்பெருஞ் ஜோதி 868
435 இறந்தவர் எழுகஎன்று எண்ணியாங் கெழுப்பிட அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 870
436 செத்தவர் எழுகெனச் செப்பியாங் கெழுப்பிட அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி 872
437 சித்தெலாம் வல்ல திறல்அளித் தெனக்கே அத்தன்என் றோங்கும் அருட்பெருஞ் ஜோதி 874
438 ஒன்றது இரண்டது ஒன்றின் இரண்டது ஒன்றினுள் ஒன்றது ஒன்றெனும் ஒன்றே 876
439 ஒன்றல இரண்டல ஒன்றின்இ ரண்டல ஒன்றினுள் ஒன்றல ஒன்றெனும் ஒன்றே 878
440 ஒன்றினில் ஒன்றுள ஒன்றினில் ஒன்றில ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே 880
441 களங்கநீத் துலகங் களிப்புற மெய்ந்நெறி விளங்கஎன் உள்ளே விளங்குமெய்ப் பொருளே 882
442 மூவிரு நிலையின் முடி நடு முடிமேல் ஓவற விளங்கும் ஒருமைமெய்ப் பொருளே 884
443 எழுநிலை மிசையே இன்புரு வாகி வழுநிலை நீக்கி வயங்குமெய்ப் பொருளே 886
444 நவநிலை மிசையே நடுவுறு நடுவே சிவமய மாகித் திகழ்ந்தமெய்ப் பொருளே 888
445 ஏகா தசநிலை யாதுஅதின் நடுவே ஏகா தனமிசை இருந்த மெய்ப் பொருளே 890

446 திரையோ தசநிலை சிவவெளி நடுவே வரையோ தருசுக வாழ்க்கைமெய்ப் பொருளே 892
447 ஈரெண் நிலைஎன இயம்புமேல் நிலையில் பூரண சுகமாய்ப் பொருந்துமெய்ப் பொருளே 894
448 எல்லா நிலைகளும் இசைந்தாங் காங்கே எல்லா மாகி இலங்குமெய்ப் பொருளே 896
449 மனாதிகள் பொருந்தா வானடு வானாய் அனாதி உண்மை அதாய் அமர்ந்தமெய்ப் பொருளே 898
450 தானொரு தானாய்த் தானே தானாய் ஊன் உயிர் விளக்கும் ஒருதனிப் பொருளே 900
451 அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய்ப் பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே 902
452 இயல்பினுள் இயல்பா இயல்பே இயல்பா உயலுற விளங்கும் ஒருதனிப் பொருளே 904
453 அருவினுள் அருவாய் அருஉரு அருவாய் உருவினுள் விளங்கும் ஒருபரம் பொருளே 906
454 அலகிலாச் சித்தாய் அதுநிலை அதுவாய் உலகெலாம் விளங்கும் ஒருதனிப் பொருளே 908
455 பொருளினுள் பொருளாய்ப் பொருளது பொருளாய் ஒருமையின் விளங்கும் ஒருதனிப் பொருளே 910
456 ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே 912
457 கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும் ஆட்டுற விளங்கும் அருட்பெரும் பொருளே 914
458 அறிவுறு சித்திகள் அனந்தகோ டிகளும் பிறிவற விளங்கும் பெருந்தனிப் பொருளே 916
459 வீடுகள் எல்லாம் விதிநெறி விளங்க ஆடல்செய் தருளும் அரும்பெரும் பொருளே 918
460 பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க உற்றருள் ஆடல்செய் ஒருதனிப் பொருளே 920
461 பரத்தினிற் பரமே பரத்தின்மேற் பரமே பரத்தினுட் பரமே பரம்பரம் பரமே 922
462 பரம்பெறும் பரமே பரந்தரும் பரமே பரம்பதம் பரமே பரஞ்சிதம் பரமே 924
463 பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே பரஞ்சுக பரமே பரஞ்சிவ பரமே 926
464 பரங்கொள் சிற்பரமே பரஞ்செய் தற்பரமே தரங்கொள் பொற்பரமே தனிப்பெரும் பரமே 928
465 வரம்பரா பரமே வணம்பரா பரமே பரம்பரா பரமே பதம்பரா பரமே 930
466 சத்திய பதமே சத்துவ பதமே நித்திய பதமே நிற்குண பதமே 932
467 தத்துவ பதமே தற்பத பதமே சித்துறு பதமே சிற்சுக பதமே 934
468 தம்பரம் பதமே தனிச்சுகம் பதமே அம்பரம் பதமே அருட்பரம் பதமே 936
469 தந்திர பதமே சந்திர பதமே மந்திர பதமே மந்தண பதமே 938
470 நவந்தரு பதமே நடந்தரு பதமே சிவந்தரு பதமே சிவசிவ பதமே 940
471 பிரமமெய்க் கதியே பிரமமெய்ப் பதியே பிரமநிற் குணமே பிரமசிற் குணமே 942
472 பிரமமே பிரமப் பெருநிலை மிசையுறும் பரமமே பரம பதந் தரும் சிவமே 944
473 அவனோடு அவளாய் அதுவாய் அலவாய் நவமா நிலைமிசை நண்ணிய சிவமே 946
474 எம்பொருள் ஆகி எமக்கருள் புரியும் செம்பொருள் ஆகிய சிவமே சிவமே 948
475 ஒருநிலை இதுவே உயர்நிலை எனும்ஒரு திருநிலை மேவிய சிவமே சிவமே 950
476 மெய்வைத்து அழியா வெறுவெளி நடுவுறு தெய்வப் பதியாம் சிவமே சிவமே 952
477 புரை தவிர்த்து எனக்கே பொன்முடி சூட்டிச் சிரமுற நாட்டிய சிவமே சிவமே 954
478 கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச் செல்வமும் அளித்த சிவமே சிவமே 956
479 அருளமுது எனக்கே அளித்தருள் நெறிவாய்த் தெருள் உற வளர்க்கும் சிவமே சிவமே 958
480 சத்தெலா மாகியும் தான்ஒரு தானாம் சித்தெலாம் வல்லதோர் திருவருட் சிவமே 960
481 எங்கே கருணை இயற்கையின் உள்ளன அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே 962
482 ஆரே என்னினும் இரங்குகின் றார்க்குச் சீரே அளிக்கும் சிதம்பர சிவமே 964
483 பொய்ந்நெறி அனைத்தினும் புகுத்தாது எனைஅருள் செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே 966
484 கொல்லா நெறியே குருவருள் நெறிஎனப் பல்கால் எனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே 968
485 உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக செயிரெலாம் விடுகெனச் செப்பிய சிவமே 970
486 பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல உயிர்த்திரள் ஒன்றென உரைத்த மெய்ச் சிவமே 972
487 உயிருள் யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச் சிவமே 974
488 இயல் அருள் ஒளி ஓர் ஏகதே சத்தினாம் உயிர்ஒளி காண்க என்று உரைத்த மெய்ச் சிவமே 976
489 அருள் அள்லாது அணுவும் அசைந்திடாது அதனால் அருள்நலம் பரவுகென்று அறைந்தமெய்ச் சிவமே 978
490 அருளுறின் எல்லாம் ஆகும் ஈதுண்மை அருளுற முயல்க என்று அருளிய சிவமே 980
491 அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம் இருள்நெறி என எனக்கு இயம்பிய சிவமே 982
492 அருள்பெறில் துரும்பும் ஓர் ஐந்தொழில் புரியும் தெருள்இது எனவே செப்பிய சிவமே 984
493 அருளறிவு ஒன்றே அறிவு மற்றெல்லாம் மருளறிவு என்றே வகுத்தமெய்ச் சிவமே 986
494 அருட்சுகம் ஒன்றே அரும்பெறல் பெருஞ்சுகம் மருட்சுகம் பிறஎன வகுத்தமெய்ச் சிவமே 988
495 அருட்பேறு அதுவே அரும்பெறற் பெரும்பேறு இருட்பேறு அறுக்கும்என்று இயம்பிய சிவமே 990

496 அருட்டனி வல்லபம் அதுவே எலாம்செய் பொருட்டனிச் சித்தெனப் புகன்றமெய்ச் சிவமே 992
497 அருள் அறியார் தமை அறியார் எம்மையும் பொருள் அறியார் எனப் புகன்ற மெய்ச் சிவமே 994
498 அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை பொருள்நிலை காண்கெனப் புகன்றமெய்ச் சிவமே 996
499 அருள்வடி வதுவே அழியாத் தனிவடிவு அருள்பெற முயலுகென் றருளிய சிவமே 998
500 அருளே நம்மியல் அருளே நம்உரு அருளே நம்வடி வாம்என்ற சிவமே 1000
501 அருளே நம்அடி அருளே நம்முடி அருளே நம்நடு வாம்என்ற சிவமே 1002
502 அருளே நம்அறிவு அருளே நம்மனம் அருளே நம்குண மாம்என்ற சிவமே 1004
503 அருளே நம்பதி அருளே நம்பதம் அருளே நம்இட மாம்என்ற சிவமே 1006
504 அருளே நம்துணை அருளே நம்தொழில் அருளே நம்விருப் பாம்என்ற சிவமே 1008
505 அருளே நம்பொருள் அருளே நம்ஒளி அருளே நாம்அறி வாய்என்ற சிவமே 1010
506 அருளே நம்குலம் அருளே நம்இனம் அருளே நாம்அறி வாய்என்ற சிவமே 1012
507 அருளே நம்சுகம் அருளே நம்பெயர் அருளே நாம்அறி வாய்என்ற சிவமே 1014
508 அருள்ஒளி அடைந்தனை அருள்அமு துண்டனை அருண்மதி வாழ்கஎன் றருளிய சிவமே 1016
509 அருள்நிலை பெற்றனை அருள்வடி வுற்றனை அருளர சியற்றுகென் றருளிய சிவமே 1018
510 உள்ளகத்து அமர்ந்து எனது உயிரில் கலந்தருள் வள்ளல் சிற்றம்பலம் வளர்சிவ பதியே 1020
511 நிகரிலா இன்ப நிலைநடு வைத்தெனைத் தகவொடு காக்கும் தனிச்சிவ பதியே 1022
512 சுத்தசன் மார்க்கச் சுகநிலை தனில்எனைச் சத்தியன் ஆக்கிய தனிச்சிவ பதியே 1024
513 ஐவருங் காண்டற்கு அரும்பெரும் பொருள் என் கை வரப் புரிந்த கதிசிவ பதியே 1026
514 துன்பம் தொலைத்து அருட்சோதியால் நிறைந்த இன்பம் எனக்கருள் எழிற்சிவ பதியே 1028
515 சித்தமும் வாக்கும் செல்லாப் பெருநிலை ஒத்துற வேற்றிய ஒருசிவ பதியே 1030
516 கையற வனைத்தும் கடிந்தெனைத் தேற்றி வையமேல் வைத்த மாசிவ பதியே 1032
517 இன்புறச் சிறியேன் எண்ணுதோறு எண்ணுதோறும் அன்பொடு என் கண்ணுறும் அருட்சிவ பதியே 1034
518 பிழைஎலாம் பொறுத்தெனுள் பிறங்கிய கருணை மழைஎலாம் பொழிந்து வளர்சிவ பதியே 1036
519 உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது குளத்தினும் நிரம்பிய குருசிவ பதியே 1038
520 பரமுடன் அபரம் பகர்நிலை இவையெனத் திரமுற அருளிய திருவருட் குருவே 1040
521 மதிநிலை இரவியின் வளர்நிலை அனலின் திதிநிலை அனைத்தும் தெரிந்த சற் குருவே 1042
522 கணநிலை அவற்றின் கருநிலை அனைத்தும் குணமுறத் தெரித்துட் குலவு சற் குருவே 1044
523 பதிநிலை பசுநிலை பாச நிலைஎலாம் மதியுறத் தெரித்துள் வயங்கு சற் குருவே 1046
524 பிரம ரகசியம் பேசிஎன் உளத்தே தரமுற விளங்கும் சாந்த சற் குருவே 1048
525 பரம ரகசியம் பகர்ந்து எனது உளத்தே வரமுற வளர்த்து வயங்கு சற் குருவே 1050
526 சிவ ரகசியம் எலாம் தெரிவித் தெனக்கே நவநிலை காட்டிய ஞான சற் குருவே 1052
527 சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுதும் அத்தகை தெரித்த அருட்சிவ குருவே 1054
528 அறிபவை எல்லாம் அறிவித்தென் னுள்ளே பிறிவற விளங்கும் பெரிய சற் குருவே 1056
529 கேட்பவை எல்லாம் கேட்பித் தென்உளே வேட்கையின் விளங்கும் விமல சற் குருவே 1058
530 காண்பவை எல்லாம் காட்டுவித் தெனக்கே மாண்பதம் அளித்து வயங்கு சற் குருவே 1060
531 செய்பவை எல்லாம் செய்வித் தெனக்கே உய்பவை அளித்தெனுள் ஓங்கு சற் குருவே 1062
532 உண்பவை எல்லாம் உண்ணுவித் தென்னுள் பண்பினில் விளங்கும் பரம சற் குருவே 1064
533 சாகாக் கல்வியின் தரம்எலாம் கற்பித்து ஏகாக் கரப்பொருள் ஈந்த சற் குருவே 1066
534 சத்திய மாம்சிவ சித்திகள் அனைத்தையும் மெய்த்தகை அளித்தெனுள் விளங்கு சற் குருவே 1068
535 எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம் வல்லான் எனஎனை வைத்த சற் குருவே 1070
536 சீருற அருளாம் தேசுற அழியாப் பேருற என்னைப் பெற்ற நற் றாயே 1072
537 பொருந்திய அருட்பெரும் போகமே உறுகெனப் பெருந் தயவால் எனைப் பெற்ற நற் றாயே 1074
538 ஆன்றசன் மார்க்கம் அணிபெற எனைத்தான் ஈன்றமு தளித்த இனிய நற் றாயே 1076
539 பசித்திடு தோறும் என்பால் அணைந்து அருளால் வசித்தமுது அருள்புரி வாய்மை நற் றாயே 1078
540 தளர்ந்ததோறு அடியேன் சார்பணைந்து என்னை உளம் தெளிவித்த ஒருமை நற் றாயே 1080
541 அருளமு தேமுதல் ஐவகை அமுதமும் தெருளுற எனக்கருள் செல்வ நற் றாயே 1082
542 இயல் அமுதே முதல் எழுவகை அமுதமும் உயலுற எனக்கருள் உரிய நற் றாயே 1084
543 நண்புறும் எண்வகை நவவகை அமுதமும் பண்புற எனக்கருள் பண்புடைத் தாயே 1086
544 மற்றுள அமுத வகைஎலாம் எனக்கே உற்றுண வளித்தருள் ஓங்குநற் றாயே 1088
545 கலக்கமும் அச்சமும் கடிந்தென துளத்தே அலக்கணும் தவிர்த்தருள் அன்புடைத் தாயே 1090

546 துய்ப்பினில் அனைத்தும் சுகம்பெற அளித்தெனக்கு எய்ப்பெலாந் தவிர்த்த இன்புடைத் தாயே 1092
547 சித்திகள் எல்லாம் தெளிந்திட எனக்கே சத்தியை அளித்த தயவுடைத் தாயே 1094
548 சத்தினி பாதம் தனைஅளித்து எனைமேல் வைத்து அமுதளித்த மரபுடைத் தாயே 1096
549 சத்தி சத்தர்கள் எலாஞ் சார்ந்து எனது ஏவல்செய் சித்தியை அளித்த தெய்வ நற் றாயே 1098
550 தன்னிக ரில்லாத் தலைவனைக் காட்டியே என்னை மேல் ஏற்றிய இனிய நற் றாயே 1100
551 வெளிப்பட விரும்பிய விளைவெலாம் எனக்கே அளித்து அளித்து இன்புசெய் அன்புடைத் தாயே 1102
552 எண் அகத்தொடு புறத்து என்னை எஞ்ஞான்றும் கண்ணெனக் காக்கும் கருணை நற் றாயே 1104
553 இன்அருள் அமுதளித்து இறவாத் திறல்புரிந்து என்னை வளர்த்திடும் இன்புடைத் தாயே 1106
554 என் உடல் என் உயிர் என் அறிவு எல்லாம் தன்ன என் றாக்கிய தயவுடைத் தாயே 1108
555 தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திடத் தரியாது அணைத்த தயவுடைத் தாயே 1110
556 சினமுதல் அனைத்தையும் தீர்த்து எனை நனவினும் கனவினும் பிரியாக் கருணை நற் றாயே 1112
557 தூக்கமும் சோம்பும் என் துன்பமும் அச்சமும் ஏக்கமும் நீக்கிய என்தனித் தாயே 1114
558 துன்பெலாம் தவிர்த்துளே அன்பெலாம் நிரம்ப இன்பெலாம் அளித்த என்தனித் தந்தையே 1116
559 எல்லா நன்மையும் என்தனக்கு அளித்த எல்லாம் வல்லசித்து என்தனித் தந்தையே 1118
560 நாயிற் கடையேன் நலம்பெறக் காட்டிய தாயிற் பெரிதும் தயவுடைத் தந்தையே 1120
561 அறிவிலாப் பருவத்து அறிவெனக் களித்தே பிறிவிலாது அமர்ந்த பேரருள் தந்தையே 1122
562 புன்னிகர் இல்லேன் பொருட்டு இவண் அடைந்த தன்நிகர் இல்லாத் தனிப்பெருந் தந்தையே 1124
563 அகத்தினும் புறத்தினும் அமர்ந்தருட் ஜோதி சகத்தினில் எனக்கே தந்த மெய்த் தந்தையே 1126
564 இணைஇலாக் களிப்புற்று இருந்திட எனக்கே துணைஅடி சென்னியில் சூட்டிய தந்தையே 1128
565 ஆதி ஈறு அறியா அருள் அரசாட்சியில் சோதிமா மகுடம் சூட்டிய தந்தையே 1130
566 எட்டிரண்டு அறிவித்து எனைத்தனி ஏற்றிப் பட்டிமண் டபத்தில் பதித்தமெய்த் தந்தையே 1132
567 தங்கோல் அளவது தந்தருட் ஜோதிச் செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே 1134
568 தன்பொருள் அனைத்தையும் தன்அர சாட்சியில் என்பொருள் ஆக்கிய என்தனித் தந்தையே 1136
569 தன்வடி வனைத்தையும் தன்அர சாட்சியில் என்வடி வாக்கிய என்தனித் தந்தையே 1138
570 தன்சித் தனைத்தையும் தன்சமூ கத்தினில் என்சித் தாக்கிய என்தனித் தந்தையே 1140
571 தன்வச மாகிய தத்துவம் அனைத்தையும் என்வசம் ஆக்கிய என்உயிர்த் தந்தையே 1142
572 தன்கையில் பிடித்த தனிஅருட் ஜோதியை என்கையில் கொடுத்த என்தனித் தந்தையே 1144
573 தன்னையும் தன்அருட் சத்தியின் வடிவையும் என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே 1146
574 தன்இயல் என்இயல் தன்செயல் என்செயல் என்ன இயற்றிய என்தனித் தந்தையே 1148
575 தன்உரு என்உரு தன்உரை என்உரை என்ன இயற்றிய என்தனித் தந்தையே 1150
576 சதுரப் பேரருள் தனிப்பெருந் தலைவன்என்று எதிரற் றோங்கிய என்னுடைத் தந்தையே 1152
577 மனவாக் கறியா வரைப்பினில் எனக்கே இனவாக் கருளிய என்னுயிர்த் தந்தையே 1154
578 உணர்ந்து உணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை அணைந்திட எனக்கே அருளிய தந்தையே 1156
579 துரிய வாழ்வுடனே சுக பூரணம் எனும் பெரிய வாழ்வளித்த பெருந்தனித் தந்தையே 1158
580 ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த பேறளித் தாண்ட பெருந்தகைத் தந்தையே 1160
581 எவ்வகைத் திறத்தினும் எய்துதற் கரிதாம் அவ்வகை நிலைஎனக் களித்தநல் தந்தையே 1162
582 இனிப்பிற வாநெறி எனக்களித் தருளிய தனிப்பெருந் தலைமைத் தந்தையே தந்தையே 1164
583 பற்று அயர்ந் தஞ்சி பரிவு கண்டு அணைந்து எனைச் சற்றும் அஞ்சேல் எனத் தாங்கிய துணையே 1166
584 தளர்ந்த அத் தருணம் என் தளர்வெலாம் தவிர்த்து உள் கிளர்ந்திட எனக்குக் கிடைத்தமெய்த் துணையே 1168
585 துறைஇது வழிஇது துணிவிது நீசெயும் முறைஇது எனவே மொழிந்தமெய்த் துணையே 1170
586 எங்குறு தீமையும் எனைத்தொட ராவகை கங்குலும் பகலும்மெய்க் காவல்செய் துணையே 1172
587 வேண்டிய வேண்டிய விருப்பெலாம் எனக்கே ஈண்டிருந்து அருள்புரி என்னுயிர்த் துணையே 1174
588 இகத்தினும் பரத்தினும் எனக்கு இடர் சாராது அகத்தினும் புறத்தினும் அமர்ந்தமெய்த் துணையே 1176
589 அயர்வற எனக்கே அருள் துணை ஆகிஎன் உயிரினும் சிறந்த ஒருமைஎன் நட்பே 1178
590 அன்பினில் கலந்து எனது அறிவினில் பயின்றே இன்பினில் அளைந்த என் இன்னுயிர் நட்பே 1180
591 நான்புரி வன எலாம் தான் புரிந் தெனக்கே வான் பத மளிக்க வாய்த்த நல் நட்பே 1182
592 உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு எள்ளுறு நெய்யில்என் உள்ளுறு நட்பே 1184
593 செற்றமும் தீமையும் தீர்த்து நான் செய்த குற்றமும் குணமாக் கொண்ட என் நட்பே 1186
594 குணங்குறி முதலிய குறித்திடாது எனையே அணங்கறக் கலந்த அன்புடை நட்பே 1188
595 பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல் கணக்கும் தீர்த்து எனைக் கலந்த நல் நட்பே 1190

596 சவலைநெஞ் சகத்தின் தளர்ச்சியும் அச்சமும் கவலையும் தவிர்த்து எனைக் கலந்தநல் நட்பே 1192
597 களைப்பறிந்து எடுத்துக் கலக்கம் தவிர்த்தெனக்கு இளைப் பறிந்து உதவிய என்உயிர் உறவே 1194
598 தன்னைத் தழுவுறு தரஞ்சிறிது அறியா என்னைத் தழுவிய என்உயிர் உறவே 1196
599 மனக்குறை நீக்கிநல் வாழ்வளித் தென்றும் எனக்குற வாகிய என்உயிர் உறவே 1198
600 துன்னும் அனாதியே சூழ்ந்தெனைப் பிரியாது என்உற வாகிய என்உயிர் உறவே 1200
601 என்றும்ஓர் நிலையாய் என்றும்ஓர் இயலாய் என்றும்உள் ளதுவாம் என்தனிச் சத்தே 1202
602 அனைத்துலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும் இனைத்தென அறியா என்தனிச் சத்தே 1204
603 பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும் இதுஎனற்கு அரிதாம் என்தனிச் சத்தே 1206
604 ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும் ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே 1208
605 சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே 1210
606 துரியமும் கடந்ததோர் பெரியவான் பொருள்என உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச் சத்தே 1212
607 அன்றதன் அப்பால் அதன்பரத்து அதுதான் என்றிட நிறைந்த என் தனிச் சத்தே 1214
608 என்றும்உள் ளதுவாய் எங்கும்ஓர் நிறைவாய் என்றும் விளங்கிடும் என் தனிச் சத்தே 1216
609 சத்திகள் பலவாய் சத்தர்கள் பலவாய் இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே 1218
610 தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய் இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே 1220
611 படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய் இடிவற விளங்கிடும் என்தனிச் சித்தே 1222
612 மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய் ஏற்பட விளக்கிடும் என்தனிச் சித்தே 1224
613 உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய் இயலுற விளக்கிடும் என்தனிச் சித்தே 1226
614 அறிவவை பலவாய் அறிவன பலவாய் எறிவற விளக்கிடும் என்தனிச் சித்தே 1228
615 நினைவவை பலவாய் நினைவன பலவாய் இனைவற விளக்கிடும் என்தனிச் சித்தே 1230
616 காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய் ஏட்சியின் விளக்கிடும் என்தனிச் சித்தே 1232
617 செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய் எய்வற விளக்கிடும் என்தனிச் சித்தே 1234
618 அண்ட சராசரம் அனைத்தையும் பிறவையும் எண்தர விளக்கிடும் என்தனிச் சித்தே 1236
619 எல்லாம் வல்ல சித்து என மறை புகன்றிட எல்லாம் விளக்கிடும் என்தனிச் சித்தே 1238
620 ஒன்றதில் ஒன்றென்று உரைக்கவும் படாதாய் என்றும் ஓர் படித்தாம் என்தனி இன்பே 1240
621 இதுஅது என்னா இயலுடை அதுவாய் எதிர்அற நிறைந்த என்தனி இன்பே 1242
622 ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல் ஏக்கற நிறைந்த என்தனி இன்பே 1244
623 அறிவுக்கு அறிவினில் அதுவது அதுவாய் எறிவற்று ஓங்கிய என்தனி இன்பே 1246
624 விடயம் எவற்றினும் மேன்மேல் விளைந்தவை இடைஇடை ஓங்கிய என்தனி இன்பே 1248
625 இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும் எம்மையும் நிரம்பிடும் என்தனி இன்பே 1250
626 முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள் எத்திறத் தவர்க்குமாம் என்தனி இன்பே 1252
627 எல்லா நிலைகளின் எல்லா உயிர்உறும் எல்லா இன்புமாம் என்தனி இன்பே 1254
628 கரும்புறு சாறும் கனிந்தமுக் கனியின் விரும்புறும் இரதமும் மிக்கதீம் பாலும் 1256
629 குணங்கொள் கோல்தேனும் கூட்டிஒன் றாக்கி மணங்கொளப் பதஞ்செய் வகையுற இயற்றிய 1258
630 உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா வணம்உறும் இன்ப மயமே அதுவாய்க் 1260
631 கலந்து அறிவுருவாய்க் கருதுதற்கு அரிதாய் நலந்தரு விளக்கமும் நவில்அரும் தண்மையும் 1262
632 உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள் உள்ளதாய் என்றன் உயிர்உளம் உடம்புடன் 1264
633 எல்லாம் இனிப்ப இயலுறு சுவை அளித்து எல்லாம் வல்லசித்து இயற்கைய தாகிச் 1266
634 சாகா வரமும் தனித்த பேரறிவும் மாகா தலிற்சிவ வல்லப சத்தியும் 1268
635 செயற்கரும் அனந்த சித்தியும் இன்பமும் மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகிப் 1270
636 பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி ஆரண முடியுடன் ஆக முடியும் 1272
637 கடந்தெனது அறிவாம் கனமேல் சபைநடு நடந்திகழ் கின்ற மெய்ஞ் ஞான ஆரமுதே 1274
638 சத்திய அமுதே தனித்திரு அமுதே நித்திய அமுதே நிறைசிவ அமுதே 1276
639 சச்சிதா னந்தத் தனிமுதல் அமுதே மெய்ச் சிதா காச விளைவருள் அமுதே 1278
640 ஆனந்த அமுதே அருள்ஒளி அமுதே தானந்த மில்லாத் தத்துவ அமுதே 1280
641 நவநிலை தரும்ஓர் நல்லதெள் ளமுதே சிவநிலை தனிலே திரண்டஉள் ளமுதே 1282
642 பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள்வான் அமுதே 1284
643 அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம் உகந்தநான் கிடத்தும் ஓங்கிய அமுதே 1286
644 பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே தனிமுத லாய சிதம்பர அமுதே 1288
645 உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே 1290

646 அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள் பண்டமும் காட்டிய பரம்பர மணியே 1292
647 பிண்டமும் அதில்உறு பிண்டமும் அவற்றுள பண்டமும் காட்டிய பராபர மணியே 1294
648 நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற அனைத்தையும் தரும்ஓர் அரும்பெறல் மணியே 1296
649 விண்பதம் அனைத்தும் மேற்பத முழுவதும் கண்பெற நடத்தும் ககனமா மணியே 1298
650 பார்பதம் அனைத்தும் பகர்அடி முழுவதும் சார்புற நடத்தும் சரஒளி மணியே 1300
651 அண்ட கோடிகள் எலாம் அரைக்கணத்து ஏகிக் கண்டு கொண்டிட ஔிர் கலைநிறை மணியே 1302
652 சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும் விராவியுள் விளங்கும் வித்தக மணியே 1304
653 மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும் தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே 1306
654 தாழ்வெலாம் தவிர்த்துச் சகமிசை அழியா வாழ்வெனக் களித்த வளர்ஒளி மணியே 1308
655 நவமணி முதலிய நலம்எலாம் தரும்ஒரு சிவமணி எனும்அருட் செல்வமா மணியே 1310
656 வான்பெறற் கரிய வகைஎலாம் விரைந்த நான்பெற அளித்த நாதமந் திரமே 1312
657 கற்பம் பலபல கழியினும் அழியாப் பொற்புற அளித்த புனிதமந் திரமே 1314
658 அகரமும் உகரமும் அழியாச் சிகரமும் வகரமும் ஆகிய வாய்மைமந் திரமே 1316
659 ஐந்தென எட்டென ஆறென நான்கென முந்துறு மறைமுறை மொழியு மந்திரமே 1318
660 வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும் ஓதநின்று உலவா தோங்கு மந்திரமே 1320
661 உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும் அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே 1322
662 சித்திக்கு மூலமாம் சிவமருந் தெனஉளம் தித்திக்கும் ஞானத் திருவருள் மருந்தே 1324
663 இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும் சிறந்த வல்லப முறு திருவருண் மருந்தே 1326
664 மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே 1328
665 நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரும் உரைதரு பெருஞ்சீர் உடையநல் மருந்தே 1330
666 என்றே என்னினும் இளமையோ டிருக்க நன்றே தரும்ஒரு ஞானமா மருந்தே 1332
667 மலப்பிணி தவிர்த்தருள் வலந் தருகின்ற தோர் நலத்தகை அதுஎன நாட்டிய மருந்தே 1334
668 சிற்சபை நடுவே திருநடம் புரியும் அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே 1336
669 இடைஉறப் படாத இயற்கை விளக்கமாய்த் தடைஒன்றும் இல்லாத் தகவுடை யதுவாய் 1338
670 மாற்றிவை என்ன மதித்தளப் பரிதாய் ஊற்றமும் வண்ணமும் ஒருங்குடை யதுவாய்க் 1340
671 காட்சிக்கு இனிய நற் கலையுடை அதுவாய் ஆட்சிக் குரிய பன் மாட்சியும் உடைத்தாய்க் 1342
672 கைதவர் கனவினும் காண்டற் கரிதாய்ச் செய்தவப் பயனாம் திருவருள் வலத்தால் 1344
673 உளம்பெறும் இடம்எலாம் உதவுக எனவே வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே 1346
674 புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும் வடம்படா நலமும் வாய்த்தசெம் பொன்னே 1348
675 மும்மையும் தரும்ஒரு செம்மையை உடைத்தாய் இம்மையே கிடைத்திங்கு இலங்கிய பொன்னே 1350
676 எடுத்தெடுத் துதவினும் என்றும் குறையா தடுத்தடுத் தோங்குமெய் அருளுடைப் பொன்னே 1352
677 தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடு வேம்எனக் கிளர்ந்திட உரைத்துக் கிடைத்தசெம் பொன்னே 1354
678 எண்ணிய தோறும் இயற்றுக என்றெனை அண்ணிஎன் கரத்தில் அமர்ந்தபைம் பொன்னே 1356
679 நீ கேள் மறக்கினும் நின்னை யாம் விட்டுப் போகேம் என எனைப் பொருந்திய பொன்னே 1358
680 எண்ணிய எண்ணியாங் கெய்திட எனக்குப் பண்ணிய தவத்தால் பழுத்தசெம் பொன்னே 1360
681 விண்ணியல் தலைவரும் வியந்திட எனக்குப் புண்ணியப் பயனால் பூத்தசெம் பொன்னே 1362
682 நால்வகை நெறியினும் நாட்டுக எனவே பால்வகை முழுதும் பணித்தபைம் பொன்னே 1364
683 எழுவகை நெறியினும் இயற்றுக எனவே முழுவகை காட்டி முயங்கிய பொன்னே 1366
684 எண்ணிய படிஎலாம் இயற்றுக என்றெனைப் புண்ணிய பலத்தால் பொருந்திய நிதியே 1368
685 ஊழி தோ றூழி உலப்புறாது ஓங்கி வாழிஎன் றெனக்கு வாய்த்தநல் நிதியே 1370
686 இதமுற ஊழிதோறு எடுத்தெடுத்து உலகோர்க்கு உதவினும் உலவாது ஓங்குநல் நிதியே 1372
687 இருநிதி எழுநிதி இயல்நவ நிதிமுதல் திருநிதி எல்லாம் தரும்ஒரு நிதியே 1374
688 எவ்வகை நிதிகளும் இந்த மா நிதியிடை அவ்வகை கிடைக்கும்என் றருளிய நிதியே 1376
689 அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே கற்பனை கடந்த கருணைமா நிதியே 1378
690 நற்குண நிதியே சற்குண நிதியே நிர்க்குண நிதியே சிற்குண நிதியே 1380
691 பளகிலாது ஓங்கும் பளிக்குமா மலையே வளம்எலாம் நிறைந்த மாணிக்க மலையே 1382
692 மதியுற விளங்கும் மரகத மலையே வதிதரு பேரொளி வச்சிர மலையே 1384
693 உரைமனங் கடந்தாங்கு ஓங்குபொன் மலையே துரியமேல் வெளியில் சோதிமா மலையே 1386
694 புற்புதம் திரைநுரை புரைமுதல் இலதோர் அற்புதக் கடலே அமுதத்தண் கடலே 1388
695 இருட்கலை தவிர்த்தொளி எல்லாம் வழங்கிய அருட்பெருங் கடலே ஆனந்தக் கடலே 1390

696 பவக்கடல் கடந்துநான் பார்த்தபோ தருகே உவப்புறு வளங்கொண்டு ஓங்கிய கரையே 1392
697 என் துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்துளம் நன்றுற விளங்கிய நந்தனக் காவே 1394
698 சேற்றுநீர் இன்றி நல் தீஞ்சுவை தரும்ஓர் ஊற்றுநீர் நிரம்ப உடைய பூந் தடமே 1396
699 கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே 1398
700 களைப்பறக் கிடைத்த கருணைநன் நீரே இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே 1400
701 தென்னைவாய்க் கிடைத்த செவ்விள நீரே தென்னை வான் பலத்தில் திருகு தீம் பாலே 1402
702 நீர்நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே 1404
703 கட்டுமாம் பழமே கதலிவான் பழமே இட்டநற் சுவைசெய் இலந்தையங் கனியே 1406
704 புனிதவான் தருவில் புதுமையாம் பலமே கனிஎலாம் கூட்டிக் கலந்ததீஞ் சுவையே 1408
705 இதந்தரு கரும்பில் எடுத்ததீஞ் சாறே பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே 1410
706 சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே 1412
707 உலப்புறா தினிக்கும் உயர்மலைத் தேனே கலப்புறா மதுரம் கனிந்தகோற் றேனே 1414
708 நவைஇலா தெனக்கு நண்ணிய நறவே சுவைஎலாம் திரட்டிய தூயதீம் பதமே 1416
709 பதம்பெறக் காய்ச்சிய பசு நறும் பாலே இதம்பெற உருக்கிய இளம்பசு நெய்யே 1418
710 உலர்ந்திடா தென்றும் ஒரு படித் தாகி மலர்ந்து நல் வண்ணம் வயங்கிய மலரே 1420
711 இகந்தரு புவிமுதல் எவ்வுல குயிர்களும் உகந்திட மணக்கும் சுகந்த நல் மணமே 1422
712 யாழுறும் இசையே இனியஇன் இசையே ஏழுறும் இசையே இயல்அருள் இசையே 1424
713 திவள்ஒளிப் பருவம் சேர்ந்த நல் லவளே அவளொடும் கூடி அடைந்ததோர் சுகமே 1426
714 நாதநல் வரைப்பின் நண்ணிய பாட்டே வேத கீதத்தில் விளை திருப் பாட்டே 1428
715 நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே 1430
716 நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே 1432
717 என்மனக் கண்ணே என்அருட் கண்ணே என்னிரு கண்ணே என்கணுள் மணியே 1434
718 என்பெருங் களிப்பே என்பெரும் பொருளே என்பெருந் திறலே என்பெருஞ் செயலே 1436
719 என்பெருந் தவமே என்தவப் பலனே என்பெருஞ் சுகமே என்பெரும் பேறே 1438
720 என்பெரு வாழ்வே என்றன்வாழ் முதலே என்பெரு வழக்கே என்பெருங் கணக்கே 1440
721 என்பெரு நலமே என்பெருங் குலமே என்பெரு வலமே என்பெரும் புலமே 1442
722 என்பெரு வரமே என்பெருந் தரமே என்பெரு நெறியே என்பெரு நிலையே 1444
723 என்பெருங் குணமே என்பெருங் கருத்தே என்பெருந் தயவே என்பெருங் கதியே 1446
724 என்பெரும் பதியே என்னுயிர் இயலே என்பெரு நிறைவே என்தனி அறிவே 1448
725 தோலெலாம் குழைந்திடச் சூழ்நரம்பு அனைத்தும் மேலெலாம் கட்டவை விட்டுவிட்டு இயங்கிட 1450
726 என்பெலாம் நெக்குநெக்கு இயலிடை நெகிழ்ந்திட மென்புடைத் தசைஎலாம் மெய்உறத் தளர்ந்திட 1452
727 இரத்தம் அனைத்தும்உள் இறுகிடச் சுக்கிலம் உரத்திடை பந்தித்து ஒருதிர ளாயிட 1454
728 மடல்எலாம் மூளை மலர்ந்திட அமுதம் உடல்எலாம் ஊற்றெடுத் தோடி நிரம்பிட 1456
729 ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திடத் தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட 1458
730 உண்ணகை தோற்றிட உரோமம் பொடித்திடக் கண்ணில் நீர் பெருகிக் கால்வழிந் தோடிட 1460
731 வாய்துடித்து அலறிட வளர்செவித் துளைகளில் கூயிசைப் பொறிஎலாம் கும்மெனக் கொட்டிட 1462
732 மெய்எலாம் குளிர்ந்திட மென் மார் பசைந்திடக் கைஎலாம் குவிந்திடக் கால்எலாம் சுலவிட 1464
733 மனங்கனிந்து உருகிட மதி நிறைந்து ஒளிர்ந்திட இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட 1466
734 அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப்பு அமைந்திடச் சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட 1468
735 அறிவுரு அனைத்தும் ஆனந்த மாயிடப் பொறிஉறும் ஆன்மதற் போதமும் போயிடத் 1470
736 தத்துவம் அனைத்தும் தாம் ஒருங்கு ஒழிந்திடச் சத்துவம் ஒன்றே தனித்துநின் றோங்கிட 1472
737 உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட 1474
738 என்னுளத் தெழுந்து உயிரெல்லாம் மலர்ந்திட என்னுளத் தோங்கிய என் தனி அன்பே 1476
739 பொன்னடி கண்டு அருட் புத்தமுது உணவே என்னுளத் தெழுந்த என்னுடை அன்பே 1478
740 தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால் என்னை வேதித்த என்தனி அன்பே 1480
741 என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து என்னுளே விரிந்த என்னுடை அன்பே 1482
742 என்னுளே விளங்கி என்னுளே பழுத்து என்னுளே கனிந்த என்னுடை அன்பே 1484
743 தன்னுளே நிறைவுறு தரம்எலாம் அளித்தே என்னுளே நிறைந்த என்தனி அன்பே 1486
744 துன்புள அனைத்தும் தொலைத்தென துருவை இன்புரு வாக்கிய என்னுடை அன்பே 1488
745 பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டாய் என்னுளங் கலந்த என்தனி அன்பே 1490

746 தன்வச மாகித் ததும்பிமேற் பொங்கி என்வசங் கடந்த என்னுடை அன்பே 1492
747 தன்னுளே பொங்கிய தண்ணமு துணவே என்னுளே பொங்கிய என்தனி அன்பே 1494
748 அருளொளி விளங்கிட ஆணவம் எனும்ஓர் இருளற என்உளத் தேற்றிய விளக்கே 1496
749 துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல் இன்புற என்உளத் தேற்றிய விளக்கே 1498
750 மயலற அழியா வாழ்வுமேன் மேலும் இயலுற என்உளத் தேற்றிய விளக்கே 1500
751 இடுவெளி அனைத்தும் இயல்ஒளி விளங்கிட நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே 1502
752 கருவெளி அனைத்தும் கதிர் ஒளி விளங்கிட உருவெளி நடுவே ஒளிர்தரு விளக்கே 1504
753 தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட ஏற்றிய ஞான இயல்ஒளி விளக்கே 1506
754 ஆகம முடிமேல் அருள்ஒளி விளங்கிட வேகமது அறவே விளங்கொளி விளக்கே 1508
755 ஆரியர் வழுத்திய அருள்நிலை அனாதி காரியம் விளக்கும்ஓர் காரண விளக்கே 1510
756 தண்ணிய அமுதே தந்து என துளத்தே புண்ணியம் பலித்த பூரண மதியே 1512
757 உய்தர அமுதம் உதவிஎன் உளத்தே செய்தவம் பலித்த திருவளர் மதியே 1514
758 பதிஎலாம் தழைக்கப் பதம்பெறும் அமுத நிதிஎலாம் அளித்த நிறை திரு மதியே 1516
759 பால்எனத் தண் கதிர் பரப்பி எஞ்ஞான்றும் மேல் வெளி விளங்க விளங்கிய மதியே 1518
760 உயங்கிய உள்ளமும் உயிரும் தழைத்திட வயங்கிய கருணை மழைபொழி மழையே 1520
761 என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப மன்னிய கருணை மழைபொழி மழையே 1522
762 உளங்கொளும் எனக்கே உவகைமேற் பொங்கி வளங்கொளக் கருணை மழைபொழி மழையே 1524
763 நலந்தர உடல்உயிர் நல்அறி வெனக்கே மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே 1526
764 தூய்மையால் எனது துரிசெலாம் நீக்கிநல் வாய்மையால் கருணை மழைபொழி மழையே 1528
765 வெம்மல இரவது விடி தருணம் தனில் செம்மையில் உதித்து உளந் திகழ்ந்த செஞ் சுடரே 1530
766 திரைஎலாம் தவிர்த்துச் செவ்விஉற் றாங்கே வரைஎலாம் விளங்க வயங்குசெஞ் சுடரே 1532
767 அலகிலாத் தலைவர்கள் அரசுசெய் தத்துவ உலகெலாம் விளங்க ஓங்குசெஞ் சுடரே 1534
768 முன்னுறு மலஇருள் முழுவதும் நீக்கியே என்னுள வரைமேல் எழுந்தசெஞ் சுடரே 1536
769 ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த ஜோதியாய் என்உளம் சூழ்ந்தமெய்ச் சுடரே 1538
770 உள்ஒளி ஓங்கிட உயிர்ஒளி விளங்கிட வெள்ஒளி காட்டிய மெய்அருட் கனலே 1540
771 நலங்கொளப் புரிந்திடு ஞான யாகத்திடை வலம் சுழித் தெழுந்து வளர்ந்த மெய்க் கனலே 1542
772 வேதமும் ஆகம விரிவும் பரம்பர நாதமும் கடந்த ஞானமெய்க் கனலே 1544
773 எண்ணிய எண்ணிய எல்லாந் தர எனுள் நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே 1546
774 வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு நலம்எலாம் அளித்த ஞானமெய்க் கனலே 1548
775 இரவொடு பகலிலா இயல்பொது நடமிடு பரம வேதாந்தப் பரம்பரஞ் சுடரே 1550
776 வரநிலை பொதுவிடை வளர்திரு நடம்புரி பரமசித் தாந்தப் பதிபரஞ் சுடரே 1552
777 சமரச சத்தியச் சபையில் நடம்புரி சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே 1554
778 சபை எனது உளம் எனத் தான் அமர்ந் தெனக்கே அபயம் அளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி 1556
779 மருள்எலாம் தவிர்த்து வரம்எலாம் கொடுத்தே அருளமுது அருத்திய அருட்பெருஞ் ஜோதி 1558
780 வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர் ஆழிஒன் றளித்த அருட்பெருஞ் ஜோதி 1560
781 என்னையும் பொருள்என எண்ணிஎன் உளத்தே அன்னையும் அப்பனும் ஆகிவீற் றிருந்து 1562
782 உலகியல் சிறிதும் உளம்பிடி யாவகை அலகில்பேர் அருளால் அறிவது விளக்கிச் 1564
783 சிறுநெறி செல்லாத் திறன்அளித்து அழியாது உறுநெறி உணர்ச்சி தந்து ஒளிஉறப் புரிந்து 1566
784 சாகாக் கல்வியின் தரம்எலாம் உணர்த்திச் சாகா வரத்தையும் தந்துமேன் மேலும் 1568
785 அன்பையும் விளைவித்து அருட்பேர் ஒளியால் இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும் 1570
786 ஓர்உரு ஆக்கி யான் உன்னிய படிஎலாம் சீர்உறச் செய்து உயிர்த் திறம்பெற அழியா 1572
787 அருளமுது அளித்தனை அருள்நிலை ஏற்றினை அருள்அறி வளித்தனை அருட்பெருஞ் ஜோதி 1574
788 வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர் அல்கல்இன் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி 1576
789 உலகுயிர்த் திரள்எலாம் ஒளிநெறி பெற்றிட இலகும்ஐந் தொழிலையும் யான்செயத் தந்தனை 1578
790 போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர் ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி 1580
791 மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும் யாவரும் பெற்றிடா இயல்எனக் களித்தனை 1582
792 போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர் ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி 1584
793 சித்திகள் அனைத்தையும் தெளிவித் தெனக்கே சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை 1586
794 போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர் ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி 1588
795 உலகினில் உயிர்களுக்கு உறும்இடை யூறெலாம் விலக நீ அடைந்து விலக்குக மகிழ்க 1590

796 சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை 1592

797 போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர் ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி 1594

798 அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி 1596

**அருட்பெருஞ்சோதி அகவல் முற்றிற்று**

**திருச்சிற்றம்பலம்**